மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் ஏற்கனவே முதலில் பதில் சொன்னேன். பட்டதாரிகளாக இருக்கிற ஹரிஜன மாணவர்கள் ஓரளவிற்குப் பட்டம் பெற்றுவிட்ட பிறகு வேறு வேலை தேடிக் கொண்டு செல்வதில்தான் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர மேற்கொண்டு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பரீட்சைகள் எழுது வதில் ஆர்வம் காட்டுவதில்லை. எனவேதான் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இருந்தாலும் அவர்களை ஊக்குவித்து அதிகப்படியானவர் களைக் கொண்டுவர முயற்சிக்கிறோம்.

Housing schemes for Harijans in Sanarapatty Union area

* 193 Q.—THIRU K. NAGARAJAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the stage of the proposal to construct housing colonies to Harijans at Andipatti and Narivilapatti of Sanarapatty Panchayat Union, Dindigul taluk, Madurai district?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுபோன்ற திட்டம் ஒன்றும் அரசு மட்டத்தில் நிலுவையில் இல்லை.

திரு. க. நாகராஜன் : இந்தத் திட்டத்திற்கான வேண்டுகோள் பல நாட்களுக்கு முன்பாகவே கேட்கப்பட்டிருக்கிறது. எனவே ஏழை ஹரிஜனங்களுக்கு அப் பகுதியில் இத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆண்டிப்பட்டிக் கிராமத் தில் ஹரிஜனங்கள் இல்லை என்று விவரம் இருக்கிறது. ஆனால் நரி விலாப்பட்டியில் கிட்டத்தட்ட இருபது வீடுகள் இருக்கின்றன. அதில் 12 பேர்கள் போக எட்டு பேர்களுக்கு வீட்டு மனை இல்லை. அந்த எட்டு பேர்களுக்கும் வீட்டு மனை கொடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

அன்னப்பநாயக்கன் குப்பத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள்

* 194 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி துணை வட்டம், அன்னப்பநாயக்கன் குப்பம் காலனியில் 1—4—1972-ல் எரிந்துபோன 80 வீடுகளை மானியத் தொகையுடன் புதுப்பித்துக் கட்டும் திட்டம் எப்பொழுது முடிவடை யும் ?

1972 டிசம்பர் 15]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ரூ. 1,26,400 செலவில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட 79 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு நிலை எண் 847, ச. ந., நாள் 15—9—1972-ல் ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாண்டுக்குள் இவ்வேலை முடியுமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன் : முயற்சி எடுத்துக்கொண்டுள்ள முதல் அமைச்சர் அவர்களுக்கும் அரிசன நல அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும்போது இந்த ஆண்டு இறுதிக் குள்ளாக அத் திட்டத்தை நிறைவேற்றித் தரமுடியுமா? இன்னும் கட்டட வேலை ஆரம்பிக்கப்படவில்லை. கடைகால் கூட போடப் படவில்லை. ஆகவே இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவாவது அவற்றை முடிப்பதற்குரிய விதத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்க அரசு தனி உத்தரவு வழங்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த ஆண்டு என்றால் மார்ச் 31-ம் தேதி வரை இருக்கிறது. நிதி ஒதுக்கீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. அதற்குள் முடிவு அடையும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Harijan Welfare whether this method of constructing by Government houses destroyed by fire would be extended to other areas also?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மற்றயிடங்கள் தீ விபத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறதென்றால் அரசு பரிசீலித்து நிதி ஒதுக்கீடு செய்து புது வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 154, 195, எண் வினாக்கள் இரண்டும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வேண்டு கோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

சேலம் உருக்காலைத் திட்டம்

* 196 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் உருக்காலைத் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை லட்சம் டன் உருக்கு உற்பத்தி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது ?